தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை, க(ம)ப, தென்காசி கோட்டம்

ந.க.எண். 05/2025 / அ2 / நாள்: 17-10-2025

# விளம்பரம் வேலைவாய்ப்பு அறிவிக்கை

(அரசாணை (ப) எண். 46 / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ப.மே.2) துறை நாள் 23-09-2016இன் கீழ் வெளியிடப்படுகிறது)

1. திருநெல்வேலி (நெ), க(ம)ப வட்டம், தென்காசி (நெ), க(ம)ப, கோட்டத்தில் காலியாக உள்ள **01 ( ஒரு எண்ணம்) காவலர் பணியிடத்திற்கு** தென்காசி மாவட்டத்தினை இருப்பிடமாக கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண். | காலிப்பணியிடங்கள் | ஒதுக்கீடு விவரம் | தகுதிகள் | | |
|---|---|---|---|---|---|
| 1. | 01 – காவலர் | ஆதிதிராவிடர் | வயது 01-07-2025 அன்று | ஆதி திராவிடர் | 18-37 |
| | | | கல்வித்தகுதி | 8 வகுப்பு தேர்ச்சி | |
| | | | ஊதிய விகிதம் | ரூ.15,700-58,100 நிலை-1 | |
| | | | அனுபவச்சான்று | அனுபவச்சான்று இப்பதவிக்கு தேவையில்லை | |

## நிபந்தனைகள்

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர் பிறந்த தேதி, வயது. கல்வித்தகுதி, சாதி, இருப்பிட முகவரி போன்ற சுய விபரங்களைக் குறிப்பிட்டும் இருப்பிடச் சான்றிதழ் மற்றும் 2 அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ / படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ **17-11-2025 பி.ப 5.45 மணிக்குள்** விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத்நேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக (Call letter) தெரிவிக்கப்படும்.
4. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்படமாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.
8. தேர்வு செய்யப்படும் நபர்களுக்கு வழங்கப்படும் பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இப்பணி நியமனத்தினை எந்த நேரத்திலும் ரத்து செய்யும் அதிகாரம் பணி நியமன அலுவலருக்கு உண்டு.
9. காலிப்பணியிடங்கள் உரிய அரசு விதிமுறைகளின்படி, ஒளிவு மறைவின்றி நிரப்பப்படும் என்பதால் இடைத்தரகர்களிடம் நம்பி ஏமாற வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**காவலர் பதவிக்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி**

**கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் (ம) பராமரிப்பு, 322 A. இரயில்வே பீடர் ரோடு தென்காசி 627811. அலுவலக தொலைபேசி எண்: 04633-220024**

**கோட்டப்பொறியாளர்,**
**நெடுஞ்சாலை,**
**கட்டுமானம் (ம) பராமரிப்பு**
**தென்காசி**

வெ.ஆணை எண்.111/செ.ம.தொ.அ/2025, நாள்: 17.10.2025